**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண் – 45/2009**
**CNR No:TNAL050000352009**

1. குஞ்சு படையாட்சி, (இறந்தார்), வயது 80,
   த/பெ நாராயணசாமி,
2. சிவகொழுந்து, வயது 80, க/பெ. குஞ்சு,
3. விஸ்வநாதன், வயது 65, த/பெ. குஞ்சு,
4. ராசமாணிக்கம், வயது 55, த/பெ. குஞ்சு,
5. தர்மலிங்கம், , வயது 54, த/பெ. குஞ்சு, வாதிகள்
   அனைவருக்கும் மேலத்தெரு, செட்டிகுழிபள்ளம் கிராமம்,
   புதுக்குடி அஞ்சல், உடையார்பாளையம் தாலுக்கா,
   பெரம்பலூர் மாவட்டம்.

Amended as per order in I.A 01/2015 in dated I.A.157/2019 – வாதிகள்

/எதிர்/

1. அண்ணாமலை, வயது 46, த/பெ பிச்சைபிள்ளை,
   மேலத்தெரு, செட்டிக்குழிபள்ளம் கிராமம்,
   புதுக்குடி அஞ்சல், உடையார்பாளையம் தாலுக்கா,
   பெரம்பலூர் மாவட்டம்.
2. தமிழக அரசு அதன் பிரதிநிதியாக அதன் மாவட்ட ஆட்சியர்,
   அரியலூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர்.
3. வட்டாட்சியர், ஜெயங்கொண்டம். வட்டாட்சியர் அலுவலகம்,
   ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் தாலுக்கா,
   அரியலூர் மாவட்டம்.
4. கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், உடையார்பாளையம்.
5. சரஸ்வதி, , வயது 60, க/பெ.அர்ச்சுனன், சூரியமணல் கிராமம்,
   உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம்.
6. மணிமேகலை, , வயது 50,க/பெ. பரமசிவம்,
   புதுக்குடி தெற்க்கு கரைமேடு கிராமம்,
   உடையார்பாளையம் தாலுக்கா,அரியலூர் மாவட்டம்.
7. இந்திராணி, , வயது 45, க/பெ.இளவரசன்,
   சிறுகளத்தூர் கிராமம், செந்தைுறை தாலுக்கா,
   அரியலூர் மாவட்டம்.

   Amended as per order in I.A 01/2015 in dated I.A.157/2019 –பிரதிவாதிகள்

வழக்கு தாக்கல் நாள் : 06.02.2009.

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 06.02.2009

| | | |
|---|---|---|
| வியாஜ்ஜிய மூலம் | : | 08.01.2003, 28.03.2008,<br>16.04.2005, 28.07.2008. |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | Rs.3125/- |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | Rs.236/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | Rs.236/- |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : | 25(பி), 27(c), of TNCF Act |

வாதிக்கு தாவா சொத்து உரிமையானது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக தாவா சொத்தை வாதி நிம்மதியாக அனுபவம் செய்து வருவதை 1-ம் பிரதிவாதியோ அவரின் வாரிசுகளோ, உறவினர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவிளதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சர்வே எண் 117/21 க்குரிய வாதியின் பட்டா எண் 687 லும் இதர சம்பந்தப்பட்ட ரெவின்யூ ஆதிரவுகளில் 1-ம் பிரதிவாதியின் பெயரை கூட்டு பட்டாதாரராக சேர்த்துள்ளதை நீக்கியும், மாற்றம் செய்ய 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்து கோரும் உறுத்துக் கட்டளை வழங்கியும், தாவா செலவுத் தொகையினை கட்சியாடும் பிரதிவாதிகளை வாதிக்கு கொடுக்கச் சொல்லி உத்திரவு செய்தும், இன்னும் இந்த வழக்கின் சூழ்நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ற இதர பரிகாரங்களை வாதிக்கு வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார், அவர்கள் முன்னிலையாகியும், ,1-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 5 முதல் 7 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>**தீர்ப்பாணை**</u>

1) வாதி அழைத்தும் ஆஜரில்லை, வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,
2) இன்று இவ்வழக்கு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது,
3) இவ்வழக்கு நீண்ட காலமாக நிலுவையிலிருந்துவரும் வழக்குகளின் பிரிவில் வரும் நிலையில், வாதி விசாரணையைத் தொடங்க முன்வரவில்லை,
4) எனவே நீதியின் நலன்கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**<u>சொத்து விபரம்</u>**

பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் டிஸ்டிரிக் ரிஜிஸ்டர், உடையார்பாளையம் சப்–ரிஜிஸ்டர் சூரியமணல் கிராமத்தை சேர்ந்த இளமங்கலம் மதுரா செட்டிகுழிபள்ளம் கிராமம், பட்டா எண் 687. நத்தம் சர்வே எண் 117/21 ஹெ.0.01.5 (0.03 ¾ சென்ட்) உரிமை அனுபவப்படி 0.04 சென்ட் இதில் உள்ள கூரை வீடும். நான்கெல்லை. வீராசாமி நத்தம் காலி மனைக்கு (பாதை) தெற்கு, அண்ணாமலை மனைக்கு மேற்கு, தங்கமனம் நிலத்துக்கு வடக்கு, கிழக்கு, மதிப்பு ரூ.4000/–.

ஒப்பம்/ திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

––––––––––––––––––––––.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.45/2009
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 05.10.2023

––––––––––––––––––––––.